

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 17.08.2026


# த.வெ.க. சட்டமன்றத்துக்கு...!



மக்களை சினிமா கவர்ச்சியில் மயக்கி, சினிமாவில் செய்வதை எல்லாம் நிஜத்திலும் செய்வேன் என ஏமாற்றி முதலமைச்சர் ஆகி விட்டார் விஜய். அவருக்கு வாக்களித்த பலபேர் வருந்திக் கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு பக்கம்.

**முதலமைச்சர் ஆகிவிட்ட விஜய், ஆட்சி நடத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, தி.மு.க.வை விமர்சிப்பதில், அதிலும் குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் கொச்சைப்படுத்துவதில் குளிர் காய்ந்து காலத்தை ஓட்ட நினைக்கக் கூடாது.**

‘எங்க உங்க அப்பாவைக் காணோம்’ என்று கொச்சைத்தனமான விமர்சனத்தை அவர் சட்டசபையில் தொடங்கி வைத்தார். இப்போது கண்டதும், காணாததும் தன்னைப் பெரிய தலைவர்களாக நினைத்துக் கொண்டு சபையில் பேசி, சபையை அசிங்கப்படுத்திக் கொண்டு இருக்கிறது. ‘உங்க அப்பாவிடம் போய் கேளுங்கள்’ என்று அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசியதும் அவரது உடல்மொழியும் அருவருப்பானவை.

**கேட்ட கேள்வியே புரியாமல் ஏதோ ஒரு பதிலைச் சொல்லி, ‘தினமும் பேப்பரை ஒழுங்காக படியுங்கள்’ என்கிறார் முதலமைச்சர். அவர் ஏதோ தினமும் பத்து பேப்பர் படிப்பதைப் போல! ‘உளவுத்துறை அனுப்பும் செய்தியையே அவர் படிப்பது இல்லை’ என்று ஊடகங்கள் வெளியிட்ட செய்தியைக் கூட அவர் படித்தாரா எனத் தெரியவில்லை.**

‘சூரியனுக்கே வேர்க்கிறது’, ‘மழைக்கே குளிர்கிறது’ என்பதைப் போன்ற மொண்ணைத் தனமான கவிதை வரிகளைச் சொல்லி முதலமைச்சர் விஜய்யை குளிர்விப்பதாக நினைத்து அவையில் அசிங்க நாற்றத்தை சிலர் பரப்பி வருகிறார்கள்.

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விமர்சிப்பதன் மூலமாக ஸ்கோர் பண்ணலாம் என்று நினைத்துச் செய்யப்படும் தற்குறித்தனமான விமர்சனங்களை த.வெ.க. அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.

**நீங்கள் பேசுவதன் மூலமாக திராவிட நாயகன் தமிழினத் தலைவர் மு.க.ஸ்டாலினை துளியும் களங்கம் ஏற்படுத்திவிட முடியாது. ஐம்பது ஆண்டு காலப் பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர். 75 ஆண்டு இயக்கத்தின் தலைவர். ஐந்தாண்டுகள் இந்த தமிழ்நாட்டை ஆண்டவர். ஐந்தே ஆண்டுகளில் ஐம்பது ஆண்டுகளுக்கான வளர்ச்சித் திட்டங்களைக் கொடுத்தவர். ஒவ்வொரு கையெழுத்திலும் ஒவ்வொரு சமூகத்துக்கும் வளர்ச்சிக்கான திட்டத்தைக் கொடுத்தவர்.**

மகளிர் உரிமைத் தொகையானது கோடிக்கும் மேற்பட்ட மகளிருக்கு பொருளாதார சுதந்திரத்தைக் கொடுத்தது. மகளிர் விடியல் பயணமானது கோடிக்கணக்கான மகளிரின் சமூகப் பங்களிப்பை உயர்த்தியது. இந்தியாவிலேயே அதிகப்படியான மகளிர் வேலைக்குச் செல்லும் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியது. பள்ளி மாணவர்க்கான காலை உணவுத்திட்டம், குழந்தைகளின் உடல் வலிமையையும் மனவலிமையையும் அதிகப்படுத்தியது. சத்துக் குறைபாடுடன் பிறந்து வளர்ந்த குழந்தைகளை உள்ளவலிமை உள்ளவர்களாக ஆக்கியது. புதுமைப் பெண் திட்டத்துக்குப் பிறகு தான் மாணவிகள் கல்லூரிக்கு படிக்க வரும் எண்ணிக்கை அதிகம் ஆனது. வேளாண் நிதிநிலை அறிக்கையானது, பாசனப்பரப்பை அதிகரித்து, விளைச்சலை அதிகரித்தது. 48 லட்சம் மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் காரணமான தனித்திறமை கொண்டவர்களாக வளர்ந்தார்கள். ஐ.ஏ.எஸ். முதல் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களுக்கு பணி கிடைத்துச் சென்றுள்ளார்கள். 10 லட்சம் கோடி முதலீட்டை ஈர்த்தார்.இந்த நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் காலா காலத்துக்கு செழிக்க வைக்கப் போகிறது.

**தியாகத்தால் அரசியலுக்கு வந்து, உழைப்பால் அரசியலில் வளர்ந்து, ஆளுமைத் திறத்தால் இந்தியாவின் தலை சிறந்த முதலமைச்சர் என்று பேர் வாங்கியவர் அவர். இன்றைய முதலமைச்சர் வரலாற்றை எதில் போய் தேடுவது?**

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு காலம் வைத்துள்ள பாராட்டுக் கல்வெட்டுகளை எந்த அரைவெட்டு விமர்சனங்களும் சேதப்படுத்தி விட முடியாது. அரை மார்க் வாங்குவதற்காக அரைகுறையாக பேசுவதைத் தவிர்த்து, ஆக்கப்பூர்வமான செயலுக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தை பயன்படுத்த வேண்டும் என்று த.வெ.க. ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தி.மு.க.கூட்டணியில் இருந்து அட்டையாக உறிஞ்சி வளர்ந்து அமைச்சராகவும் ஆகிவிட்ட ஒருவர், ‘முரசொலி’ நிலம் பஞ்சமி நிலம் என்றெல்லாம் எடுத்துக் கொடுத்து நினைவூட்டிய பச்சோந்தித் தனத்தையும் பார்க்கிறோம். பிழைக்க இதுபோன்ற இழிசெயல்கள் தேவையில்லை. இத்தகைய குணம் படைத்தவர்கள் வருங்காலத்தில் விஜய்யையும் என்னவெல்லாம் சொல்லப் போகிறார்களோ? இது போன்ற திடீர் வேடதாரிகளிடம் தான் எச்சரிக்கை அதிகம் தேவை.

**‘முரசொலி’ தமிழ் நிலத்தைப் பண்படுத்திய போர் முரசு. 85 ஆண்டுகளைக் கொண்டாடிய கொள்கைக் கோபுரம். அது ஒலித்ததால்தான் தமிழ்நாட்டுக்கு விடியல். அது ஒலித்துக் கொண்டே இருந்தால்தான் தமிழ்நாட்டுக்கு விடியல்.**

திராவிட முன்னேற்றக் கழகம் - அதன் தலைவர் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் - தமிழினத்தின் போர் முரசமாம் ‘முரசொலி’ ஆகிய மூன்றும் கொச்சைப்படுத்தப்பட அனுமதியோம். த.வெ.க. ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

**ஆட்சி செய்யத் தெரிந்தால் செய்யுங்கள். மக்களுக்கு நன்மை செய்ய நினைத்தால் செய்யுங்கள். அது தெரியாமல் திசை திருப்புவதற்காக தி.மு.க.வை கொச்சைப்படுத்தி அசிங்கப்பட்டு போகாதீர்கள்.**

## த.வெ.க. ஆட்சியில் அதிகாரிகள் மெத்தன போக்கு!

# தேனியில் அடிக்கடி பழுதாகும் அரசு பேருந்துகள்!

## பொதுமக்கள் அவதி!

*தேனி, ஆக. 17 -*

*தேனி அரசு போக்குவரத்து கழக கிளையில் தவெக ஆட்சியில் அரசு போக்குவரத்து கழக பேருந்துகள் அடிக்கடி வழியில் பழுதாகி நிற்பதால் டிரைவர்கள் கண்டக்டர்கள் மீது பழியை போட்டு விட்டு அதிகாரிகள் தப்பித்து விடுகின்றனர் இதனால் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.*

*கிராமப்புற வழித்தடங்கள் மற்றும் நகர பேருந்துகள் முறையான பராமரிப்பு இல்லாமல் இயக்கப்படுவதாக பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.*

*வேலைக்கு, பள்ளிக்கு செல்லும் நேரத்தில் பேருந்து திடீரென பழுதாகி நிற்பதால் நேரம் வீணாவதுடன், அடுத்த பேருந்துக்காக மணிக்கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.*

*குறிப்பாக மலைப்பகுதி மற்றும் தொலைதூர கிராமங்களுக்கு செல்லும் பேருந்துகளில் பிரேக், டயர், எஞ்சின் பழுது போன்ற கோளாறுகள் அடிக்கடி ஏற்படுவதாகவும், இதனால் பயண பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாகவும் பயணிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.*

*பேருந்துகளை உரிய காலத்தில் பராமரித்து, நல்ல நிலையில் இயக்க வேண்டும் என்றும், பழுதான பேருந்துகளுக்கு பதிலாக உடனடியாக மாற்று பேருந்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*போதிய பேருந்துகள் இல்லாததால் ஏற்கனவே நெரிசலில் பயணிக்கும் நிலையில், அடிக்கடி பழுதாவது மக்களின் அன்றாட வாழ்கையை மேலும் சிரமப்படுத்துவதாக பயணிகள் வேதனை தெரிவித்தனர்.*



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆக.15 அன்று, தனது பிறந்தநாளையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தனது பிறந்தநாளையொட்டி (ஆக. 15 ) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தென்காசி சட்டமன்ற அலுவலகத்தில் சுதந்திர தினவிழா!

## மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. – தி.மு.இராசேந்திரன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

தென்காசி, ஆக.17 –

தென்காசியில் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தென்காசியில் உள்ள சட்ட மன்ற தொகுதி அலுவலகத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் தென்காசி வடக்கு மாவட்ட பொறுப்பாளருமான மா.செல்லத்துரை,மாவட்ட பொருளாளர் செரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஜேசு ராஜன், பொதுக் குழு உறுப்பினர்கள் க.இராஜேஸ்வரன், சாமிதுரை, மாவட்ட துணை செயலாளர் கென்னடி,தென்காசி ஒன்றிய குழு தலைவர் சேக்அப்துல்லா,முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் துரை (எ) ராமையா பாண்டியன்,காசி தர்மம் துரை, கவுன்சிலர் செல்வம்,மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார், வழக்கறிஞர் வேலுச்சாமி பாண்டியன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரஹீம், மேலகரம் ஜீவானந்தம், ஹவுசிங் போர்டு ராம்ராஜ், மாணவரணி மைதீன்,ஐ.டி விங். குற்றாலம் ஜெய்சங்கர்,மாநில பேச்சாளர் இஸ்மாயில், சிவநாடா னூர் சமுத்திர பாண்டியன், குறும்பலாபேரி உதயசூரியன், மேலப்பாவூர் ராமர், கவுன்சிலர் வெங்கடேஸ்வரன், நகர இளைஞரணி அருண், வார்டு செயலாளர் வேல் ஐயப்பன், நவநீதகிருஷ்ணன், இசக்கி ரவி, மகளிர் அணி சுசிலா ரவீந்திரன், சாந்தி, சபர் நிஷா உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஒளிமிகு எதிர்காலத்தை நோக்கிய

# நமது பயணம் வெல்ல வேண்டும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஆக. 17 –

“கோடிக்கணக்கான மக்களின் கனவுகள் நனவாகும் ஒளிமிகு எதிர்காலத்தை நோக்கிய நமது நாட்டின் பயணம் வெல்ல வேண்டும்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திர தின நாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.




இது குறித்து அவர் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

பிற்போக்கையும் பழமையையும் வேரறுத்து, பன்மைத்துவத்தையும் ஒற்றுமையையும் உயர்த்திப் பிடிப்பதே நமது இந்தியா! கோடிக்கணக்கான மக்களின் கனவுகள் நனவாகும் ஒளிமிகு எதிர்காலத்தை நோக்கிய நம் நாட்டின் பயணம் வெல்ல வேண்டும்! நாளை என்பதை அறிவாலும் ஆற்றலாலும் வடிவமைத்து, சமத்துவம் - சகோதரத்துவம் - முற்போக்கு - மனிதநேயம் உள்ளிட்ட விழுமியங்களோடு ஒன்றுபட்டு முன்னேறுவோம்! அனைவருக்கும் விடுதலை நாள் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 17 -**

**ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் டெல்லி முன்னாள் முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்த நாளையொட்டி நேற்று (16.08.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:**

எனது அன்பிற்குரிய நண்பர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!



நிகழ்காலத்தைக் கடந்து சிந்திக்கும் உறுதியும், மக்களின் எதிர்பார்ப்புகளை நிலையான மாற்றங்களாக உருவாக்கும் முனைப்பும் கொண்டவர்களால்தான் இந்தியாவின் எதிர்காலம் கட்டியெழுப்பப்படும்.

நமது மக்களின் ஆற்றல் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையுடன், துணிவோடும் தெளிவான நோக்கத்தோடும் உங்கள் விரிந்த பார்வையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.